# சூழலியல் பாதுகாப்பில் இதழ்களின் பங்கு

நெறியாளர் முனைவர் இரா. செல்வி,
இணைப்பேராசிரியர்,
பூ.சா. கோ. கலை அறிவியல் கல்லூரி,
கோவை -641014

ந.மஞ்சுளா,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் ,
பூ.சா. கோ. கலை அறிவியல் கல்லூரி
கோவை-641014

தகவல் தொடர்பு என்பது செய்திகளையும் எண்ணங்களையும் கருத்துக்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வாகும். அத்தகைய தகவல் தொடர்பியலின் வளர்ச்சி உலகம் இன்று உள்ளங்கையில் அடக்கி விடும் அளவிற்கு உயரத்தை எட்டியுள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வழியில் கணினி துறையும் தகவல் தொழில்நுட்பத் துறையும் இணைந்து மனித சமுதாயத்திற்கு வழங்கியுள்ள பெருங்கொடை இணையமாகும். மக்கள் மனதில் உணர்வுபூர்வமான எண்ணங்களை உருவாக்கி அதன் மூலம் சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வருவதே இதழ்களின் சிறந்த நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன. இதழ்கள் , சாதி, சமயம், இனம், மொழி, அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றைக் கடந்த ஒரு பொதுத் தகவல் தொடர்பு சாதனமாக மட்டுமல்லாமல் மக்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் சூழலியல் சார்ந்த கருத்துக்களை பரப்புவதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அந்திமழை இதழ் செயல்படும் தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**முக்கிய வார்த்தைகள்:**
தகவல் தொடர்பு- சூழலியல்- உணர்வுபூர்வமான எண்ணங்கள்-பிரச்சினைகள்-மாற்றகள்.

**முன்னுரை**

தகவல் தொடர்பு என்பது செய்திகளையும் எண்ணங்களையும் கருத்துக்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வாகும். அத்தகைய தகவல் தொடர்பியலின் வளர்ச்சி உலகம் இன்று உள்ளங்கையில் அடக்கி விடும் அளவிற்கு உயரத்தை எட்டியுள்ளது. இத்தகைய வளர்ச்சிக்கு இன்றியமையாத முதன்மை காரணியாக விளங்குவது கணினித் துறையே ஆகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வழியில் கணினி துறையும் தகவல் தொழில்நுட்பத் துறையும் இணைந்து மனித சமுதாயத்திற்கு வழங்கியுள்ள பெருங்கொடை இணையமாகும். மக்கள் மனத்தில் உணர்வுபூர்வமான எண்ணங்களை உருவாக்கி அதன் மூலம் சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வருவதே இதழ்களின் சிறந்த நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன. புவியில் நம் மனித குல வாழ்வுக்குப் பெரிதும் சவாலாக இருக்கும் காலநிலை மாற்றம் குறித்து நம் இளைய தலைமுறைகள் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமான ஒன்று.மனித சமூகம் சார்ந்த சூழலுடன் இணைந்து தகவல் பரிமாற்றத்தில் தனிப்பெரும் இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. மக்கள் மத்தியில் சூழலியல் சார்ந்த கருத்துக்களை பரப்புவதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அந்திமழை இதழ் செயல்படும் தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**இதழியலும் சூழலியலும்**

இதழ்கள், சாதி, சமயம், இனம், மொழி, அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றைக் கடந்த ஒரு பொதுத் தகவல் தொடர்பு சாதனம் ஆகும். எந்த ஒரு இனத்தின் மீதும் கட்சியின் மீதும் விருப்பு

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2026, IRJTSR

வெறுப்பின்றி தகவல்களைத் தருவது இதழ்களின் தலையாயக் கடமையாகும். இதழ்கள் தகவல்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் மக்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் சமூக அரசியல் பொருளாதார உலகளாவிய தத்துவமும் இயக்கமும் சூழலியம் எனப்படும். சூழலியல் என்பது உயிரினங்களுக்கும் அவற்றின் சூழலுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராயும் அறிவியல் ஆகும். இது காலநிலை, இயற்கை வளங்கள் மற்றும் பல்லுயிர் பெருக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. சுற்றுச்சூழல் ஒரு அறிவியல் துறையாக வளர்வதற்கு முன்னரே சூழல் பாதுகாப்பில் தமிழர்கள் தலைசிறந்து விளங்கினர். ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்கள் வரையிலும் தன் உயிர் போலப் பேணுவதை வாழ்வாகக் கொண்டனர். குளம் தொட்டு வளம் பெருக்கி நிலவளத்தையும் நீர் வளத்தையும் பேணுதலே சங்ககால மன்னர்களின் கடமையாக இருந்தது. அத்தகைய உன்னதப் பணி அந்திமழை இதழானது சூழலியல் சார்ந்த கருத்துக்களையும் கவிதைகளையும் சிறுகதைகளையும் அவ்வப்போது சிறப்பிதழ்களையும் வழங்கி மக்களிடம் சூழலியல் சார்ந்த சிந்தனைகளை ஏற்படுத்தி வருகிறது.

## அந்திமழை – அறிமுகம்

அந்திமழை இதழ் கலை இலக்கியம் மற்றும் சூழலியல் ஆகிய மையங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் ஆக்கங்களை அச்சு மற்றும் இணைய இதழ்களின் வாயிலாக வெளியிட்டு வருகின்றது. வலையொளி மற்றும் வளையொலி போன்ற உறுப்புகளையும் அந்திமழை இதழ் கொண்டுள்ளது. நவீன தமிழ் இலக்கியம் என்கிற மாபெரும் வரலாற்றின் பக்கங்களில் மிகச்சிறிய உறுப்பாகத் தொடர்ந்து இலக்கியப் பணிகளைத் தொய்வின்றி செய்து வருகிறது. தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு, வரலாறு, நாட்டுப்புறவியல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து இவற்றுடன் தொடர்புடைய படைப்புகளை வெளியிடுகின்றது. சூழலியல், காலநிலை மாற்றங்கள் போன்ற நிரூபிக்கப்பட்ட அறிவியலை மையமாகக் கொண்டு எழுதப்படும் ஆக்கங்களை வெளியிட்டு மக்களிடம் சூழலில் சார்ந்த சிந்தனைகளை ஏற்படுத்தி வருகின்றது.

அதன் வாயிலாக வெகுஜன மக்களுக்கு இவற்றின் இன்றைய தேவை மற்றும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. கலை இலக்கியச் சூழலியல் ஆக்கங்களை அயல் மொழிகளில் இருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழிப் படைப்புகளை அயல் மொழியிலும் மொழிபெயர்ப்புகள் செய்து வெளியிட்டு வருகிறது. புதிய படைப்பாளிகளுக்கு வெளிச்சம் அளிக்கும் களமாக அந்திமழை இதழ் செயல்படுகிறது.

அந்திமழை இதழ், இணையத்தில் வெளியாகும் சிறப்பிதழ்கள், எழுத்தாளர்களின் நூல்கள், சூழலில் மற்றும் காலநிலை மாற்றங்களை மையமாகக் கொண்டு எழுதப்படும் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், சிறார் இலக்கிய நூல்கள் போன்ற அனைத்து வகையான படைப்புகளும் அந்திமழை பதிப்பகம் வழியாக அச்சேற்றி நூல்களாக வெளியிடுகின்றன.

## அந்திமழை இதழில் சூழலியல் திறனாய்வு

சூழலியல் திறனாய்வு என்பது இலக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள உறவை பல்துறை கோணத்தில் நோக்கும் பரந்துபட்ட ஆய்வாகும். இதை மேற்கொள்ளும் இலக்கிய அறிஞர்கள் சுற்றுச்சூழல் அக்கறையை வெளிப்படுத்தும் படைப்புகளை எடுத்துக்கொண்டு அவை இயற்கையை அணுகும்

பாங்குகளை ஆராய்வர். மாந்தருக்கும் இயற்கை சூழலுக்கும் உள்ள தொடர்புகளே சூழலில் திறனாய்வின் அடிப்படையாகும்.

காலநிலை மாற்றத்தின் விளைவுகள் உலகின் மற்ற பகுதிகளில் நம்மிடமிருந்து வெகு தொலைவில் நிகழ்ந்து கொண்டிருப்பதான மாயையில் இருந்து நாம் வெளிவர வேண்டும். இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் மிக வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி விட்டன. வெப்ப அலைகள், கணிப்பில் தவறும் புயல்கள், உள்ளிட்ட வானிலை நிகழ்வுகள், அதிதீவிர மழை, பருவமழை அமைப்பு மாறுதல், வேளாண்மையில் வீழ்ச்சி, கடல் மட்ட உயர்வு ,பனிப்பாறை உருகுதல், கடல் நீர் உட்புகுதல், இடப்பெயர்வு போன்றவை மனிதர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் என்றால் புவியில் வாழும் மற்ற உயிரினங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதிபயங்கரமானவை.

இவ்வுலகில் மரம், செடி, கொடிகள், பூச்சிகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள், வனவிலங்குகள் என அனைத்தும் மனிதனோடு உலகத்தை பகிர்ந்து கொள்கின்றன. அனைத்து உயிர்களும் அவற்றின் இயல்புகளோடும் உரிமைகளோடும் வாழ்வதற்கென்று அமைந்திருப்பது இவ்வுலகம். நீர், நிலம், காற்று போன்ற அனைத்தும் இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் உரிமை உடையன என்ற நிலையை மறந்து நாளைய தலைமுறையினருக்கு என சற்றும் அதனை விட்டு வைக்காமல் மனிதன் தனக்கு என்று உரிமையாக்கிக் கொண்டு வாழும் போது தான் உயிரினச் சமநிலை பாதிக்கப்படுகிறது. “இத்தகைய காலநிலை மாற்றத்திற்கு எதிராக மக்கள் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் அவர்கள் அது குறித்து பேசுவதை தேர்ந்தெடுப்பேன்" என்று இளம் காலநிலை செயல்பாட்டாளர் கரெக்டா துன்பர் கூறுவதை முன்வைத்து நாம் பேசத் தொடங்க வேண்டும்.

## அநீதியின் சுவடுகள்

நவீன தொழில்நுட்ப வளர்ச்சி உச்ச நிலையில் இருந்தாலும் துப்புரவுத் தொழிலாளர்களின் மரணத்தைத் தடுக்க இயலாத நிலையிலேயே நாம் இருக்கின்றோம். ஐந்து நாட்களுக்கு ஒரு துப்புரவுத் தொழிலாளி மரணம் அடைகிறான். 1972 ஆம் ஆண்டு வியட்நாம் போரில் ஒருவர் எடுத்த புகைப்படம் போரையை நிறுத்தியது போல ஒரு புகைப்படக் கலைஞனால் மக்கள் மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயலும் புகைப்படக் கலைஞர் பழனிக்குமார் அவர்களின் **'அநீதியின் சுவடுகள்'** என்ற கட்டுரைப் பகுதியானது அமைந்துள்ளது.

**“ஏன் இந்த வேலையை இவர்கள் செய்ய வேண்டும்? எப்படி இந்த வேலையை இவர்கள் செய்கிறார்கள்? இவர்களின் சம்பளம் எவ்வளவு?**
**அரசு இவர்களுக்கு என்ன செய்கிறது?”( பழனிகுமார் ,அந்திமழை, ஜூன்** - 2019 )

போன்ற கேள்விகளை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடந்த புகைப்பட கண்காட்சியைக் கண்ட மாணவர்கள் மத்தியில் எழும்படி செய்தது கட்டுரையாளரின் சமூகப் பொறுப்புணர்வு நிலையை வெளிப்படுத்துகிறது.

## பூவுலகின் பெருந்தோழன்

சூழலியல் என்பது மனிதன் வாழும் இடத்தைச் சுற்றியுள்ள இயற்கை தன்மைகள் பற்றிய அறிவியலாகும். இயற்கையின் நீடித்த நிலைத்த வளங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் அறியும் அறிவியல்ல

சூழலியல் ஆகும். இயற்கை வளங்களை மனிதன் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் மனிதர்களின் தவறான செயல்பாடுகளால் இயற்கையின் தன்மையில் ஏற்படும் மாறுபாடுகள் எத்தகைய விளைவை ஏற்படுத்துகின்றன என்பதை மக்களுக்கு அறிவிக்கும் வகையில் அமைக்கப்படும் கட்டுரைகள் சூழலியல் சார்ந்த கட்டுரைகள்.

இதழின் ஆசிரியர் திரு ந.இளங்கோவன் அவர்கள் கால்நடை மருத்துவராக இருந்த காரணத்தினாலும் இயற்கையின் மீது கொண்ட அக்கறையின் காரணத்தினாலும் ஆடு, மாடு, நாய் போன்ற விலங்குகள் பற்றிய கட்டுரையை ஒவ்வொரு இதழிலும் இடம் பெறும் வகையில் அமைத்துள்ளார். அவ்வகையில் 2020 ஜூலை மாதம் வெளிவந்த **'பூவுலகின் பெருந்தோழன்'** என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் ,

"உலகத்தின் வனத்திடையே மௌனமாக பஞ்சம் கால் நீட்டி படுத்திருக்கிறது. ஒட்டி உலர்ந்த குழந்தையின் பசிக் குரல் போல அது தீனமாக ஒலிக்காது தான் ஆனால் அதற்காக அதன் கொடூரத்தை குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஒருநாள் அது விஸ்வரூபம் எடுக்கும் உலகம் முழுவதையும் தன் காலடியில் போட்டு நசுக்கும். கொரோரமாக சிரிக்கும்." **(ம.திருமாவேலன் அந்திமழை , ஜூலை -2020)**

ஆம் இந்த வரிகளுக்கான அர்த்தம் கொரோனாவின் கொடூரத்தை அனுபவித்த அனைவருக்கும் புரியும்.

"அணு உலையை எதிர்ப்பவர்கள் அரைவேக்காடுகள், தொழில்நுட்பம் தெரியாதவர்கள், விஞ்ஞான பார்வையற்றவர்கள், மக்களுக்கான வேலை வாய்ப்பை மருதலிப்பவர்கள், தேச விரோதிகள் என்று சொல்லப்பட்ட போது ஹிரோஷிமா நாகசாகி கொடூரத்தை விவரித்து அதன் அபாயத்தை வெளிப்படுத்தியவர் செழியன்." உயிரை விட நீங்கள் சொல்லும் எதுவும் மேலானது அல்ல என்று சொல்லித் தந்தார். நியூட்டன் யுரேனியம் என்று சிலர் வகுப்படுத்த போது எல்லா நாடும் கைவிட்ட அணு உலையை எங்கள் தலையில் கட்டாதே என்று புரியும் மொழியில் சொன்னவர். இவர் ஒரு சூழலில் சிந்தனையாளர் மட்டுமல்ல மனித உரிமை, சமூக நீதி, பொது உடைமை, உலகமய தாராளமய தனியார் மைய எதிர்ப்பு, ஈழ விடுதலை, தமிழ் வழிக் கல்வி, தலித் விடுதலை என அனைத்து அனைத்தும் உள்ளடங்கிய ஒரு மாமனிதராக விளங்கினார். அவர் நிலத்துக்குள் வேராக இருக்க வேண்டும் என்று நினைத்தாரே தவிர மரத்தில் பூவாக இருக்க ஒருபோதும் நினைத்ததில்லை. தன்னை பின்னே வைத்து தனது கொள்கையை முன்னே வைக்கும் இயல்பினராக இருந்த பூவுலகின் நாயகன் நெடுஞ்செழியன் அவர்களை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியுள்ளார் கட்டுரையின் ஆசிரியர் திருமாவேலன் அவர்கள்.

**முடிவுரை**

தகவல் தொடர்பியல் துறை இன்று அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகள் அதனால் மனிதர்களும் விலங்குகளும் சந்திக்கும் விளைவுகள் குறித்து இதழ்கள் செய்திகளை வெளியிட்டு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. எனினும் மனிதர்களாகிய நாம் செய்ய வேண்டிய செயல்கள் பற்றி சிந்தித்து அடுத்தத் தலைமுறைகளுக்கு இந்த பூமியை தூய்மையானதாக விட்டுச் செல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காலநிலை மாற்றத்திற்கு மனிதர்களே முதன்மையான காரணம் என்பதை புரிந்து செயல்பட்டால் மட்டுமே இந்த சூழலியல் பிரச்சினையில் இருந்து முழுமையாக விடுபட முடியும்.


© 2026, IRJTSR

**பார்வை நூல்கள்**


[1] **காலநிலை மாற்றம் செய் அல்லது செத்து மடி** ஆதி வள்ளியப்பன், பாரதி புத்தகாலயம், சென்னை-18

[2] **சுற்றுச்சூழல் தவறுகளும் பாடங்களும்** சரவணன் பார்த்தசாரதி, பாரதி புத்தகாலயம், சென்னை-18

[3] **பசுமைப் பள்ளி** நக்கீரன், காடோடி பதிப்பகம், வி. கே. என். நகர், நன்னிலம்.

**[4]** அந்திமழை மாத இதழ்


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*